**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. No.246/2023**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-1<br>LW-5 |
| Name | : | Raju |
| Father Name | : | Krishnasamy |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.03.2026

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

A2,4,5,6,8 present. A10 NBW pending,

**<u>அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

1.நான் திருப்பூர் வஞ்சிபாளையம் கூடியிருக்கிறேன். நான் டைல்ஸ் ஒட்டும் தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு என்ன தெரியும் என்று கேட்டால் நீண்ட நாட்கள் ஆகிவிட்டதால் எனக்கு ஞாபகம் இல்லை. என்ன நடந்தது என்றும் எனக்கு ஞாபகம் இல்லை என்ன தேதி என்று ஞாபகம் இல்லை. எதிரிகளை தெரியுமா என்று கேட்டாலும் தெரியாது.

**<u>சாட்சியை பிறழ்சாட்சியமாக அறிவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

1. கடந்த 05.12.2010 தேதி அன்று வேலை முடித்துக் கொண்டு சுல்தான் பேட்டை அருகே செல்லும்போது குளத்து புதூர் இரவு சுமார் 10 மணி அளவில்மகாராணி டையிங் எதிரில் மங்கலம் டு திருப்பூர் ரோட்டில் நிறைய பையன்கள் பீர் பாட்டிலை உடைத்துக் கொண்டு சத்தம் போட்டுக் கொண்டிருந்தனர் என்றும் சொல்லிவிட்டு அதன் பின்பு விசாரித்து தெரிந்த போது அவர்கள் குலத்து புதூர் குடியிருக்கும் உதயகுமார் என்பவர் மோட்டார் சைக்கிளை ஓட்டிக்கொண்டு வந்த போது அவருடைய அண்ணன் இளையராஜா என்பவர் பின்னாடி உட்கார்ந்து வந்த போதும அவர்கள் ஏன் இப்படி பாட்டில்களை உடைக்கிறீர்கள் என்றும் கேட்டார்கள் என்றும் அதற்கு அப்படித்தான் உடைப்போம் என்று கெட்ட வார்த்தைகளாக பேசியதாகவும் அவர்களை தாக்கியதாகவும் அதற்கு நான் நேரில் பகிர்ந்து பார்த்தேன் என்றும் சொல்லிவிட்டு அதில் ஆஜார் எதிரிகள் தான் இளையராஜா மற்றும் வாதியை தாக்கினார்கள் என்றும் போலீசாரணையின் போது சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்காக ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya. DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91 Date: 2026.03.09 19:31:29 +0530

முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.

**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. No.246/2023**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-2 |
| Name | : | ராஜேஸ்வரி |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.03.2026

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**
A2, 4, 5, 6, 8 present. A10 NBW pending,

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1.நான் தற்போது திருப்பூர் மாநகரம் மத்திய காவல் நிலை குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் கடந்த ஆறு 11 2010 ஆம் ஆண்டு 14.30 மணிக்கு மங்கள காவல் நிலைய குற்ற எண் 2404/2010 சிறப்பு காவல் ஆய்வாளரான சுவாமிநாதன் என்பவர் நிலையப் பொறுப்பில் இருந்தபோது உதயகுமார் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் அடிப்படையில் மங்களம் காவல் நிலைய குற்ற எண் 2404/2010 அண்டர்

செக்சன் 147, 148, 324, 307 ஐ பி சி யின் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் ரமேஷ் குமார் என்பவரிடம் கோப்புகளை புலன் விசாரணைக்காக அனுப்பி வைத்தார்.

2. காவல் ஆய்வாளர் ரமேஷ் குமார், காவல் ஆய்வாளர் சலீம் ஆகியோரிடம் பணிபுரிந்த காரணத்தினால் எனக்கு அவர்களுடைய கையெழுத்து நேரடியாக தெரியும் ஆவணங்களின் அடிப்படையில் இன்று நான் சாட்சியம் அளிக்கிறேன். புலன் விசாரணைக்கு கோப்புகளை எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று ஒன்று முதல் ஆறு சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

3. அதன் பின்பு செந்தில் மற்றும் இளங்கோ என்ற சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள் பார்வை மகஜர் தயாரித்தார்கள் அவர்களிடம் கையெழுத்தும் பெற்றார்கள். அதே இடத்தில் சம்பவ இட சாட்சிகள் முன்னிலையில் நான்கு துண்டுகள் உடைந்த பாட்டிலை கைப்பற்றினார்கள். அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயாரித்தார்கள்.

4. பின்பு எதிரியை தேடி பேருந்து நிலையத்தில் திருநெல்வேலி பஸ் செல்லும் பேருந்து நிலையத்தில் எதிரிகள் இருப்பதாக கிடைத்த தகவலை பெற்று 1 முதல் 6 எதிரிகளை கைது செய்து சம்பவ இடம் அழைத்து வந்து முதல் எதிரி குமார் என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள். ஒப்புதல் வாக்குமூலத்திற்கும் இளங்கோ மற்றும் கார்த்திகேயன் என்ற இரண்டு சாட்சிகள் கையெழுத்து செய்தார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் முதல் எதிரியை

அழித்து சென்று அவர் எடுத்துக் கொடுத்த 19 சென்டிமீட்டர் இருக்கும் கத்தியை கைப்பற்றினார்கள்.

5. அதன் பின்பு காயம் பெற்ற சாட்சியான உதயகுமார் என்பவரிடம் ரத்தக்கரை படிந்த அவருடைய வேட்டியை கைப்பற்றினார்கள். புலன் விசாரணை அதிகாரி இந்த வழக்கின் புலன் விசாரணையின் மத்தியில் வேறு ஒரு இடத்திற்கு மாற்றலாம் சென்று விட்ட காரணத்தினால் புலன் விசாரணையை தொடர்ந்து காவல் ஆய்வாளர் சலீம் என்பவர் நடத்தி வந்தார் அவருடன் வேலை செய்த வகையில் அவரின் கையெழுத்தும் எனக்கு நேரடியாக தெரியும்.

6. அதன் பின்பு புலன் விசாரணையின் பகுதியாக மருத்துவர் கேசவ மூர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் அவரிடம் இருந்து காய சான்றிதழ் பெற்றார். உதயகுமார் மற்றும் இளையராஜா என்ற இருவருக்கும் காயச்சான்றிதழ் பெறப்பட்டது. அதன் பின்பு புலன் விசாரணை முடிக்கப்பட்டு 17.12.2012 ஆம் தேதி அன்று இ.தா.சா பிரிவுகள் 147 ,148, 307, r/w 149 படி குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. மற்ற எதிரிகள் முன் ஜாமின் பெற்றிருந்த நிலையில் அவர்களை கைது செய்யவில்லை.

புகார்–**அரசு தரப்பு சாட்சி–1**

முதல் தகவல் அறிக்கை–**அரசு தரப்பு சான்று ஆவணம்–2**

பார்வை மகஜர்–**அரசு தரப்பு சான்று ஆவணம்–3**

மாதிரி வரைப்படம்–**அரசு தரப்பு சான்று ஆவணம்–4**

சீசர் மகஜர்–**அரசு தரப்பு சான்று ஆவணம்–5**

சீசர் மகஜர்–**அரசு தரப்பு சான்று ஆவணம்–6**

சீசர் மகஜர்–**அரசு தரப்பு சான்று ஆவணம்–7**

ஒப்புதல் வாக்குமூலம்–**அரசு தரப்பு சான்று ஆவணம்–8**

இளையராஜாவில் விபத்து பதிவேடு–**அரசு தரப்பு சான்று ஆவணம்–9**

காயச்சான்றிதழ்–**அரசு தரப்பு சான்று ஆவணம்–10**

இரத்தக்கரைப் படிந்த வேட்டி–**MO–1**

பீர் பாட்டில் நான்கு துண்டுகள்–**MO–2**

கத்தி–**MO–3**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1.சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் எந்த விதமான குற்றமும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சரி வர போல விசாரணை செய்யாமல் குற்ற அறிக்கையை தாக்கல் செய்திருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கத்திற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி எந்தவிதமான வாக்கு மூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்தவிதமான பொருளும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தை எதிரியை கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல எங்கள் காவல்துறையின் கணக்குகளுக்காக எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கத்திற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91
Date: 2026.03.09 19:31:39 +0530

முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.